முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருநாவுக்கரச நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

19.12.2018, புதன்கிழமை

1. **திருவருள் காட்டிடும் ஞானியே**
**தேவர்கள் மெச்சும் வண்ணம்**
**தருமம் வளர்க்கின்ற தவசியே**
**தரணியிலே உன் பெருமை கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி சிலை திங்கள்**
**தெரியவே சதுர் திகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 4ம் நாள் 19.12.2018, புதன்கிழமை)**
**தேசிகனுக்கு திருநாவுக்கரச நாயனார் யானும்**

3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உலகமெங்கும் அரங்க ஞானியும்
ஞானமிக்க சீடர்களை உருவாக்கி
நற்காரியங்கள் செய்து வருக

4. வருகவே ஆறுமுகன் பெருமையை
வையகம் யாவும் அறியச் செய்யவே
ஆறுமுகனார் சூட்சும சக்தியாக வந்த
அரங்கமகான் சேவைக்குள் உலகோர்

5. உலகோர் வருகை புரிய
உகந்து தரும சிந்தை வளர்த்து
உலகமெங்கும் அன்னதான சேவை
உயர்வாய் வளர்த்து வருக

6. வருகவே தெளிவும் திடமும்
வருவோர்க்கு வினை நீக்கம் கண்டு
முருகப்பெருமான் அருளும் ஆசியும்
முழுமை ஞானம் பெற உண்டான

7. உண்டான சிறப்புத் தகுதியும்
உயர்வும் வந்தடையக் கூடும்
கண்டு வரும் பேரிடர் கஷ்டங்களும்
கந்தபெருமான் வழிபாடு பெருக

8. பெருகவே இனி அணுகாத
பெரும் பாதுகாப்பும் பலமும்
முருகனார் அருளும் துணையும்
முழுமைபட சித்தியும் கண்டுயர்வர்

9. உயர்வுதரும் ஞானியே அரங்கா
உலகம் காக்கும் தவசியே தேசிகா
தயவு பெருக்கும் கலியுக ஞானியே
தண்டாயுதனே தரும சக்தியே

10. சக்திமிக ஐயனே யோகியே
சங்கடம் போக்கியே காத்திட
முக்தி தரும் முருகப்பெருமானின்
மூலமே மூர்த்தியே அரங்கா

11. அரங்கா உன் பெருமை அறிய
அகிலம் நிலைகள் உயரும்
வரங்களென கலியுகம் தேறும்
வழங்கிய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் திருநாவுக்கரசர் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

தெய்வத்தின் அருளாம் திருவருளை மக்களுக்கு காட்டி அருளும் மகா ஞானியே தேவர்களெல்லாம் புகழ்ந்து போற்றும்படி அளவிலாது தர்மத்தினை வளர்க்கின்ற மகா தவசியே இவ்வுலகினிலே உமது பெருமையை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 4ம் நாள் 19.12.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே திருநாவுக்கரசர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருநாவுக்கரசர்.

ஆறுமுக அரங்கமகாதேசிகர் ஞானம்மிக்க சீடர்களை உருவாக்கி உலகமெங்கும் நற்காரியங்களை செய்து வருகின்றார். நற்சீடர்கள் மூலம் உலக மக்களெல்லாம் ஞானத்திற்கே தலைவனாக இருக்கின்ற முருகப்பெருமானின் பெருமையை அறியச் செய்திடவே, மகா ஞானகுருவாக உலகின் சற்குருவாக முருகப்பெருமானின் சூட்சும சக்தி வடிவமாக அவதரித்துள்ளார் ஆறுமுக அரங்கமகா தேசிகனார்.

முருகப்பெருமானின் சூட்சும சக்தி வடிவமாக வந்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனார் ஆற்றும் சேவைக்குள் உலக மக்கள் வந்து அரங்கன் சேவைகளை ஏற்று தாமும் செய்து வருவதுடன் அரங்கனின் தானதருமப் பணிகளுக்கு மனமுவந்து தருமம் செய்து தருமசிந்தையை வளர்த்து உலகமெங்கும் அன்னதான சேவைகளை உயர்வாய் வளர்த்து வர வேண்டும்.

உலக உயிர்களின் பசிப்பிணி போக்கும் ஜீவதயவு செயலாகிய அன்னதானத்தினை உலகமெங்கும் செய்து வரவர, மக்களிடையே தெளிவும், மனோதிடமும் உருவாகி அன்னதானசேவை செய்து வருவோரின் வினைகளெல்லாம் முருகப்பெருமானின் ஆசிகளால் நீங்கி முருகப்பெருமானின் அருளையும் ஆசிகளையும் பெற்று முழுமை ஞானம் பெறுவதற்கான சிறப்பான தகுதிகளையும் உயர்பண்புகளும் பக்குவமும் வந்தடையும்.

உலகினில் முருகப்பெருமானின் வழிபாடு பெருக பெருக, தற்சமயம் உலகை அச்சுறுத்தி துன்பத்தில் ஆழ்த்துகின்ற விதமாக நடந்து வருகின்ற இயற்கை பேரிடர்கள் எல்லாம் இனி அணுகாமல் முருகப்பெருமானின் அருள் பாதுகாப்பை இவ்வுலகம் பெற்றிடும். இயற்கையும் பலமுள்ளதாய் மக்களுக்கு நன்மையே செய்யும்.

அன்னதானம் செய்வோர் முருகப்பெருமானின் அருள்பலமும் அருட்துணையும் அவர்கள் பெற்று முழுமைபட சித்திகளையும் கண்டு உயர்வடைவர்.

எல்லா மேன்மைகளையும் தந்தருளும் ஆறுமுக அரங்கமகா தேசிகனே உலகினை காக்கும் மகா தவசியே தயவினை உலகினில் பெருக்குகின்ற கலியுக மகா ஞானியே முருகப்பெருமானே தருமத்தின் சக்தி வடிவமே, எல்லையில்லா சக்திமிக்க ஐயனே, மகா ஞானயோகியே, மக்களின் துன்பம் போக்கி காத்து முக்தியையும் தந்தருளும் முருகப்பெருமானின் மூலமே, மூர்த்தியே அரங்கமகா தேசிகனே உமது பெருமைகளை இவ்வுலகோர் அறிந்திட்டால் இவ்வுலகின் நிலை உயர்வடையும், கலியுகமும் உம்மால் கடைத்தேறிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் திருநாவுக்கரசர்.

–சுபம்–